உ
சிவமயம்

# திருவருள்

★ அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்வோம் ★

சாவகச்சேரி

மலர் 1 | இந்துசமயச் சஞ்சிகை | இதழ் 2



கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

— திருவிசைப்பா

THIRUVARUL — A Hindu Magazine — Vol 1 No. 2

திரிகரண சுத்தியும்

காரிய சித்தியும்

அருள

"திருவருளை" வேண்டுகிறோம்

K. பாலகிருஷ்ணன்

312, நீர்கொழும்பு வீதி

பேலியாகொடை

தொலைபேசி எண்: 070 - 284

உ

சிவமயம்

# திருவருள்

— அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்வோம் —

மலர் 1 / இந்துசமயச் சஞ்சிகை / இதழ் 2

## பொருளடக்கம்


| இலக்கம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | நன்றியும் நம்பிக்கையும் | 1 |
| 2. | திருவருள் இதழின் வெளியீட்டு விழா. | 4 |
| 3. | சிவன் ராத்திரி — ஆங்கில மூலம், சுவாமி சின்மயானந்தர். | 6 |
| 4. | வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பிரான். ஆர்.வி. | 8 |
| 5. | சிவனை வணங்குவோம் — சிவஞானவாரிதி, சைவசித்தாந்தக் காவலர், குமாரசுவாமி குருசுவாமி. | 10 |
| 6. | தமிழ்ச்சமய நெறி — தவத்திரு குன்றக்குடி அடிகளார். | 21 |
| 7. | நம்மைப்பற்றி | 27 |
| 8. | நவக்கிரக தோத்திரம் | 29 |
| 9. | நமது பாரம் பரியம் | 30 |

# ★ நன்றியும் நம்பிக்கையும் ★

'அரியது கேட்கின் வரிவடிவேலோய், அரிது அரிது மானிடராதல் அரிது' என்பது ஔவை மூதாட்டியின் அருள்வாக்கு. முருகப்பெருமானிடம் கனிந்த பக்திகொண்ட இந்த அம்மையார், "அழகு பொருந்திய வேலையுடைய முருகா! உலகத்தில் பெறுவதற்கு முடியாதது எது?" எனக்கேட்டு அதற்கு விடையாக மானிடப்பிறவி எடுப்பது மிகவும் கஷ்டமானது எனவுள்ள கூற்று, வினா விடையாக அமைந்ததொரு திருவாக்காகும். அப்படியெனின் இந்தச்சரீரம் எவ்வாறு நமக்குக் கிடைத்திருக்கிறது என்பதற்கு "திருவருள் இரக்கத்தின் பெறுபேறே இந்தச் சரீரம், என்றும் எதற்காக இது நமக்குக் கிடைத்திருக்கிறது என்பதற்கு மாந்தர்களாகிய உயிர்களுக்கு உயிரைத் திருவருளோடு தொடர்புபடுத்துவதற்கு இச்சரீரம் கிடைத்திருக்கிறது எனவும், இதனை எவ்விதம் தொடர்புபடுத்துதல் வேண்டும் என்பதற்கு, பேணுகிற முறையில் பேணித் திருவருளுக்குப் பாத்திரமாதல் வேண்டும் எனவும், பேணுகிற முறைகளை உபகரித்து 'திருவருள்' பரோபகாரம் புரிவதாக என்ற தூய உள்ளத்தெழுந்த பிரார்த்தனை உரையும், இன்றைய உலகில் இந்து இளைஞர் மத்தியில் இறை நம்பிக்கையுடைய பக்தி விழிப்புணர்ச்சியோடு பரவச் செய்தல் வேண்டும் எனவும் தேஜஸ்சோடு வளர்பிறைபோல் வளர்ந்துவர ஊக்கமும் ஆக்கமும் அருள எல்லாம் வல்ல இறைவனை வேண்டி உள்ளத்துறுதியூட்டும் ஆசியுரையும், இந்துக்கள் மட்டுமல்லாத பிறமதத்தவர்களையும் இந்துதர்மத்தின் விலை மதிக்கமுடியாத இரத்தினங்கள் போன்ற பல ஆன்ம இரகசியங்களையும் மறைமுக தத்துவங்களையும் புரிந்துகொண்டு அதன்படி நடந்து உள்ளத்தில் உறைநிலையில் செயலற்றுக் கிடக்கும் உயர் ஆத்ம சத்தியைத் தட்டி எழுப்பி இறையின்பத்தைத் தொட்டு அநுபவித்து அமைதி ஆநந்தம் நிறைந்த அருள்வாழ்வாம் பெருவாழ்வு வாழவும், அழிவுப்பாதையை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் மக்களின் அறியாமை இருளை அகற்றும் அருளொளியாக எமது திருவருள் பிரகாசிக்க விளையும் திரிகரணசுத்திய் பிரார்த்தனையும் இம்மூன்றும் செயற்கரிய செய்யும் பெரியார்களின் உள்ளத்தூய்மையினையும் உயர்வினையும் ஒளியினையும் காட்டும் சீரிய சிறந்த வாக்குகள் ஆகும்.

திருவருள் மலரை அழகு மலராக என்றென்றும் நிலைத்திருக்கச் செய்ய வேண்டுவன கூறி வாழ்த்துகின்ற இப்பிரார்த்தனைகள் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும், தளராத உற்சாகத்தினையும், விடாமுயற்சி,

பொறுப்புணர்ச்சியினையும் தருவன ஆகும். இவர்களும் எம்முடன் ஒன்றிணைந்து, புறம் புறம் திரிந்து 'திருவருள்' மலரின் ஏற்றத்துக்கு 'வேண்டத்தக்க தறிந்து வேண்ட முழுதுந்தந்து' நமக்கு உறுதுணையாக இருப்பதனை வேண்டுகின்றோம். அந்தமில் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தாம் மாத்திரம் உண்டிலராய பிறர்க்குரிய இம்மேன் மக்களுக்கு உளங்கனிந்த நன்றி.

நவராத்திரி நாட்களில் வரப்பெற்ற சரஸ்வதிஞானதேவதை என்ற கட்டுரை வாயிலாக அருள்திரு. சுவாமி சின்மயானந்தா அவர்கள் இந் நாட்களில் நாம் வணங்கும் மூன்று சக்தித்தெய்வங்களுள் ஒன்றாகிய அறுபத்துநான்கு கலைகளையும் எமக்கு உரைக்கும் சரஸ்வதித் தாயின் தோற்றத்தைக் குறிக்கும் தத்துவ விவரங்களை எடுத்து இருப்பது காலத்திற்கேற்ப கருத்தறியத் தவிக்கும் இக்கால இளைஞர்களுக்கும் சமய அடித்தளத்தில் வாழுகின்ற, இடைவிடாமல் கேள்வி கேட்கின்ற பள்ளிச் சிறுவர்களுக்கு எடுத்துக்கூறக் கருத்துத் தெரியாமல் அங்கலாய்க்கின்ற பெற்றோர்களுக்கும், ஐயங்களை நீக்கும் உள்ளத்தெளிவினையும் மனத்திருப்தியினையும், கருத்தறிந்து 'இலயித்துப் பிரார்த்தனை செய்யும் மனப்பக்குவத்தையும் தந்து அவரவரைத் தத்தம் பக்திநெறிப் படுத்தி முக்திநெறி காட்டுவதாகும். இத்தகைய தத்துவங்களை விளக்கிக் கூறும் கட்டுரைகளைத் தொடர்ந்து தந்தருளுமாறு சுவாமிகளைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அவர்களுக்கும் எமது நன்றி.

சிங்கப்பூர்க் கடிதத்துக்குரியவர் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளார்கள். நாம் செய்ய வேண்டியனபற்றி வரிசைப்படுத்திக் கூறும் ஒரு சிறந்த கடிதம். செய்வன திருந்தச் செய்யின் சிங்கப்பூரிலுள்ள எமது சமயத்தவர்களை அணுகி, பணஞ்சேர்ப்பதில் கஷ்டமிராது என்ற ஆக்கம் தரும் உறுதிமொழி, எமக்குப் போதிய நல்லாதரவைத் தருகிறது. முயற்சிகள் தூய்மையாகவும், குறிக்கோள்கள் செம்மையாக நல்வழிச் செல்வனவாயும் இருப்பதையே விரும்பும் திருவருளினர் மத்தியிலும் தங்கச் சுரங்கமென, இலைமறைகாய் போலுள்ள, வரையாது வழங்கும் வள்ளல்களும் இல்லாமலில்லை. இத் 'திருவருள்' வாடாமலராக நிலைத்திருக்க நிதி மிகுந்தவர் பொற்குவை தந்து, நிதிகுறைந்தவர் காசுகள் தந்து, அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளி நமது முயற்சிக்குப் பக்க பலமாக நின்று ஆதரவு தருவர் என நம்புகிறோம்.

இத்திருவருள் 'மலர்' களிப்பூட்டும் அழகியவண்ணத்தால், ஈர்க்கும் தன் நறுமணத்தால், சுவைக்கும் நறுந்தேனினால் வண்டுகளாகிய எமது வாசகர்களையும் மேலும் பல வாசகர்களையும் விரைந்து பற்றிப்பிடிக்



கிறது — பிடிக்கும் என்ற அறிகுறிகள் காணப்படுகின்றன. இதுவும் திருவருளின் பெறுபேறாகும். திருவருள் வழிச்செல்லும் நல்லாதரவு தரும் நல்லுள்ளங்கள் உள்ளவரை நமக்கென்ன குறை!

'நம்பினார் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்'

என்பது கவி சுப்பிரமணிய பாரதியாரின் கூற்று.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்.

வருகின்ற மாசி மாதம் 21-ந்திகதி (4-3-81) புதன்கிழமை மகா சிவராத்திரி தினமாகும். திருக்கேதீச்சரத் திருத்தலத்திலுள்ள திருவாசக மடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரது சார்பில், ஸ்ரீ சரவணமுத்து சுவாமிகள் அனுமதியுடன் பிரபல வழக்கறிஞரும், சைவப்பெரியாருமாகிய திரு. சி. சிவசுப்பிரமணிய ஐயா அவர்களின் ஆசியுடன், பலகாலமாக (காலஞ்சென்ற) சிவத்தொண்டர் திரு. R. M. ரெங்கநாதபிள்ளை அவர்கள் புரிந்து வந்த அன்னதானப் பணியில் இவ்வாண்டு திருவருள் இயக்கத்தினர் பங்குகொள்ள உள்ளனர். உதவி புரிய விரும்பும் அன்பர்களை திரு. R வைத்திமாநிதி அவர்களுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

# திருவருள் இதழின் வெளியீட்டு விழா

*10-12-80-ல்* கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவிலிலும், 12-12-80-ல் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ ஞானசம்பந்தர் ஆதினத்திலும் நடைபெற்றன.

இரு நிகழ்ச்சிகளிலும் ஆதீனகுரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமை தாங்கி ஆசியுரை வழங்கினுர்கள். அவர்கள் கூறியதாவது:

“தானங்களிற் சிறந்தவை அன்னதானமும் ஞானதானமுமாகும். இவற்றுள் ஞானதானமே மிகச்சிலாக்கியமானது. ஏனெனில் இறைவனின் திருவருள் நலத்தினை ஆய்ந்துணருந் தன்மையை ஞானமே நல்குகிறது.

அகஇருளைப் போக்கவல்லது திருவருள். இன்று வெளியிடப்படும் திருவருள் என்னும் சமயசஞ்சிகையும் அதே போன்று மக்களின் அகவிருளைப் போக்கவல்லதாகும்.

இன்றைய உலகில் சைவஇளைஞர் மத்தியில் இறை நம்பிக்கையையும் பக்தியையும் விழிப்புணர்ச்சியோடு பரவச் செய்வது சைவப்பெரியார்களினதும், வர்த்தகப் பெருமக்களினதும் கடமையாகும்”

★ ★ ★

சிவநெறிக்காவலர் திரு. க. கனகராசா பேசுகையில் “சைவம் தழைக்க ஒரு பத்திரிகை தேவை. அப்பத்திரிகையின் மூலம் சைவத்தின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டுமென நாவலர் பெருமானுர் ஆசைப்பட்டார். அவரது ஆசையை ‘திருவருள்’ பூர்த்தி செய்யும் என்பதில் எமக்கு எவ்வித ஐயமுமில்லை” என்ருர். (நன்றி : ஈழநாடு)

★ ★ ★



கொழும்பு விழாவில் வர்த்தகப் பிரமுகர் திரு. K. குமாரசுவாமி அவர்கள் முதற்பிரதியைப் பெற்ருர். சிவஞான வாரிதி கு. குருசுவாமி, திரு. சிவராஜசிங்கம், திரு. S. நவரத்தினம், திரு. நாராயணசுவாமி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். பெருந்திரளான வர்த்தகப் பெருமக்களும் ஆலய தர்மகர்த்தா சபையினரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர். திரு. ஆ. கந்தையா அவர்களின் உதவியால் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பெற்றது.

★ ★ ★

யாழ்ப்பாண விழாவில் சிவநெறிச்செல்வர் திரு. க. கனகராசா அவர்கள் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். பிரபல சமயப்பெரியார்களான திரு. சின்னையா, திரு. க. சி. குலரட்ணம், திரு. மு. கந்தையா, திரு. கார்த்திகேசு ஆகியோரும் வர்த்தகப் பிரமுகர்களும் பங்குபற்றினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை உறுப்பினருள் ஒருவராகிய திரு. க. இளையதம்பி அவர்கள் விழா ஒழுங்குகளைச் செய்ததுடன் அன்பர்களுக்குப் பிரசாதமும் வழங்கினுர்.

## வாழ்த்து

திருவருள் முதல் மலரைப் படித்து மகிழ்ந்தேன். சிறந்த ஆன்மீகக் கட்டுரைகளைத் தாங்கிவரும் இந்நூல் எல்லோருடைய ஆதரவையும் அன்பையும் பெற்று மிகச் சிறந்த இதழாக இலங்கைவாழ் தமிழர்களின் உள்ளத்தைக் கவர இறைவனை வணங்குகிறேன்.

நலம் நல்க இறைவனைப் பிரார்த்தித்து

சின்மயா மிஷன்,
கொழும்பு - 7.

தங்கள் சேவையில்,
(பிரம்மச்சாரி) வியக்த சைதன்யா

திருவருள் இதழுக்கு நன்கொடையாக ரூபா 15/- க்குக் குறையாமல் அனுப்பி உதவும் அன்பர்களுக்கு :

★ திருவருள் இதழ்கள் ஓராண்டுக்கு அனுப்பிவைக்கப்பெறும்.

★ இயக்க இலவச வெளியீடுகள் தவருது கிடைக்க ஒழுங்குகள் செய்யப்படும்.

★ மற்றும் எமது பிரசுரங்கள் மலிவு விலைகளில் விற்பனை செய்யப்படும்.



ஓம்

# சிவன் ராத்திரி

ஆங்கில மூலம்: சுவாமி சின்மயானந்தர்
தமிழாக்கம்; பிரம்மச்சாரி வியக்தசைதன்யா

சத்தியம் என்றைக்கும், எல்லோருக்கும் புதுமையானது! அளவில் பெரியதாலும், தன் ஸ்வரூபத்தில் ஒன்றாயும் இருக்கும் சிவம் மனித மனம் வளர, வளர என்றைக்கும் புதியதாகவே தோன்றுகிறது! இதனால் நம் சான்றோர்கள் "சிவனைக் கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை என்பர்! இதற்கு மாறாக, ஜட ரூபமான இந்த உலகும், அதில் தோன்றும் சம்பவங்களும் வரலாற்றிற்கு கருப்பொருளாகின்றன. அதனால் வரலாறு என்பது என்றைக்கும் பழமையானதாக அல்லது கடந்த காலத்தைச் சார்ந்ததாகத்தான் இருக்கிறது! இருக்கவேண்டும். இப்படிப்பட்ட வரலாற்றுச் சம்பவங்களைத் துணையாகக்கொண்டு, என்றென்றும் புதுமையாகத் தோன்றக் கூடிய சிவத்தை உணர்த்துவது சிவபுராணம் எனப்படும்! புராணம் என்ற சொல்லுக்கு பழமையும், புதுமையும் கூடியது என்று பொருள்! இப்புராணங்களுக்கு கர்த்தாவான வியாசருக்கு புராணமுனி என்று ஒரு பெயரும் உண்டு. இப்புராணங்கள் அழகிய போதனை முறைகளைத் தன்னகத்தே கொண்டவை. ஜடத்திற்கு அப்பாற்பட்ட சத்தியத்தை — ஜடத்தின் நிகழ்வுகளைக்கொண்டு உணர்த்தும் ஒரு உயர்ந்த முயற்சி. இம்முயற்சிகள் ஞான ரூபமாகவும், கிரியா ரூபமாகவும் உணர்த்தப்பட்டுள்ளன! விரதங்கள் கிரியாரூப முயற்சிகளில் அடங்கும்! சிவன் ராத்திரி விரதம் ஒரு பெரும் உண்மையை உணர்ந்து கொள்வதற்காக வியாசரால் நமக்கு அருளப்பட்டுள்ளது. இதன் உண்மையறிந்து இவ்விரதத்தைக் கடைப்பிடிப்போமாயின், சிவ உணர்வு நம் உள்ளத்தில் தோன்றுவது திண்ணம்.



இருளை மட்டும் கொண்ட காலத்தை இராத்திரி என்கிறோம்! இருளிற்கு ஒரு விசித்ர தன்மை உண்டு. எந்தப் பொருளையும் அழிக்காமல், அதை மறைத்து பொருளே இல்லாதது போல் தோன்றச்செய்வது இருளின் தன்மை! இருள் என்பது ஒரு தனிப்பொருளல்ல! அது தனியாய் இருப்பது போல் தோன்றும்! ஆனால் அது தனித்து நிற்க முடியாது! ஏதேனும் ஒன்றைச் சார்ந்தே இருக்க வேண்டும்! உதாரணமாக நம் வீட்டில் உள்ள ஒரு அறையில் புகுந்து, அந்த அறையையே தனக்கு இருப்பிடமாகக் கொண்டு, அதே நேரத்தில் எதைச் சார்ந்திருக்கிறதோ அந்த அறையையும் அதில் உள்ள பொருட்களையும் மறைக்கும் விசித்ர வல்லமை கொண்டது இருள்! ஆனால் எவ்வளவு காலம் இந்த இருள் அறையில் குடிகொண்டிருந்தாலும் ஒளி தோன்றிய உடனேயே, அந்த அறையை விட்டு விலகி விடும்! அறையும் அதில் உள்ள பொருட்களும் நம் புலன்களுக்கு எளிதில் புலனாகும்!

'சிவம்' என்ற சொல்லுக்கு "அழியாதது" என்று பொருள்! எது அழிவதில்லையோ அதில் அச்சத்திற்கு உண்டான காரணமில்லை. சுருக்கமாக சிவம் இருக்கும் இடத்தில் பயமில்லை. இதனால் சிவனை நம்பின பெரியோர் நாமார்க்கும் குடியல்லோம் என்பர்! ஒவ்வொரு மனித மனமும் அச்சமில்லாமல் வாழ விரும்புகிறது. மாற்றிச் சொன்னால் எல்லா மனங்களும் சிவனுக்கு அடிமை! சிவனை விரும்புகின்றன! சிவன் எங்கிருக்கிறான்! நம் உள்ளத்தில் மெய்யறிவு வடிவாய், ஒன்றாய் இருக்கிறான்! இருந்தும் ஏன் நாம் பார்க்கவில்லை! சிவனிருந்தும் நம்மனதில் அச்சமா? ஆம் — இருப்பதை மறைக்கும் இருளும் நம்முள் உண்டு. அந்த இருளை நீக்கி ஒளியைக்காணும் விரதம் "சிவன் ராத்திரி" விரதம்! கடைப்பிடிப்போம்! அவன் கழல் பற்றுவோம்!!

தவத்திரு சுவாமி சின்மயானந்தா அவர்கள் இவ்வாண்டு மே மாதம் 9-ம் நாள் தொடக்கம் 19-ம் நாள் வரை இலங்கையில் இருப்பார்கள். அப்பொழுது கீதா யக்ஞச் சொற்பொழிவுகளும் (கீதை: 3-ம் அத்தியாயம்) 'ஆத்ம போதம்' என்ற நூல் பற்றியும் விளக்குவார்கள்.

இலங்கை சின்மயா மிஷன், 7, இராணி வீதி, கொழும்பு - 7

# வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பிரான்!

*

சென்ற ஆண்டு எனது வாழ்வில் ஓர் அற்புத நிகழ்ச்சி நடைபெற்றது. அதனை நினைக்குந் தோறும் எனது உள்ளம் புளகாங்கிதம் அடைவதுடன், உடம்பும் புல்லரிக்கின்றது.

எனது வீட்டிற்கு அருகிலுள்ள ஆலயத்தில் பூசை, திருவிழாக்களில் ஒன்றை நமது பெயரில் செய்யப்பெறுவது பெரும் பாக்கியமாகும். ஏனெனில் இங்குள்ள அன்பர்கள் 'நான்முந்தி நீமுந்தி' என்று அவற்றைப் பதிவு செய்து கொள்வார்கள். விசேஷ நாட்கள் என்றால் கேட்கவும் வேண்டுமா ?

எப்படியோ தெரியவில்லை, திருவெம்பாவை பத்து நாட்களில் ஒரு நாள் உற்சவ நிகழ்ச்சி எனது பெயருக்குப் பதிவு ஆகியது. இஃது இறைவன் திருவருளே என்றால் மிகையாகாது.

ஒரு புறம் மகிழ்ச்சிதான் என்றாலும், எனது சிந்தனை யாவும் சிறிது காலத்துக்கு முன் சிவபதம் அடைந்த எனது தந்தையைப்பற்றிச் சென்றன. அவர் இருக்கும்பொழுது பூசையைப் பெறும் பாக்கியம் கிட்டவில்லை. அப்பேறு பெற்ற நேரத்தில் அவர் இல்லை. அவர் இருந்திருந்தால் திருவெம்பாவைப் பாக்களைத் தமது கணீரென்ற தெளிவான குரலில் ஓசை நயத்துடனும் பக்திப் பெருக்குடனும் பாடியிருப்பாரே! இப்பொழுது வழக்கமாகக் கோவிலில் பாடும் அன்பரைத்தானே பாடச்செய்ய வேண்டும்! இவ்வெண்ணம் எனக்குக் குறிக்கப் பெற்றிருந்த பூசைநாளில் முதல் நாளிரவே எனது மனதை உறுத்திக் குழப்பிக் கொண்டிருந்தது.

அதிகாலையில் வெளித்தோற்றத்தில் ஓரளவு உற்சாகத்துடன் கோவிலுக்குச் சென்றேன். ஆரம்ப பூசைகளைச் செய்த அர்ச்சகர் " திருவெம்பாவை " பாடப்பெறும் என்பதைக்கூறி நின்றார்.



என்ன ஆச்சரியம்! எனது தந்தையைப் போன்ற உருவ அமைப்புள்ள ஓர் அன்பர் அங்கு வந்து பாடத் தொடங்கினார். எனது அப்பாவைப் போன்ற மெல்லிய நடுத்தர வயது கடந்த தோற்றம், தீட்சை பெற்றோர் இடும் பட்டை பட்டையான திருநீற்றுக் குறிகள், சற்று வழுக்கையான முன்தலை, பின்பக்கம் இருந்த சிறிது முடியுடன் அமைக்கப் பெற்ற ஒரு சிறு குடுமி, அவரது குரலும் எனது தந்தையின் குரலொப்பவே இருந்தது. என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. எனது பக்திப் பரவசத்திற்கும் அளவேயில்லை. எனது தந்தையே திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுகிறார் என்ற நினைப்பில் என்னை மறந்த நிலையில் இருந்தேன்.

அன்று திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிய அன்பர் வெளியூரிலிருந்து முதல்நாள் வந்ததாகக் கூறினார்கள். வழமையாகப் பாடுபவருக்கு உடல் நலமில்லையாதலால் இவரைப் பாடும்படி கேட்டுக் கொண்டார்களாம். அவரும் நிலைமையை அறிந்து சம்மதித்தாராம்.

ஆனால் புதுஅன்பர் அன்று மட்டுந்தான் பாடினார். அதனை அடுத்த திருவெம்பாவை நிகழ்ச்சிகளில் வழமையான கோவில் அன்பரே பாடினார். என் தந்தையை ஒத்த அன்பரை அதற்குப்பிறகு நான் பார்க்கவும் இல்லை.

எனது உள்ளக்கிடக்கையை அறிந்து எனக்கு மன அமைதியைக் கொடுக்கும் வண்ணம் அருள் சுரந்த ஐயனின் திருவருள் இருந்தவாறு என்னே! இதனாலன்றோ இறைவனை வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பிரான் என்று பக்தர்கள் கூறுகிறார்கள்.

— ஆர்வி, கொழும்பு.



உ

# சிவனை வணங்குவோம்

சிவஞானவாரிதி, சைவசித்தாந்த காவலர்,
குமாரசுவாமி குருசுவாமி

இந்த உலகம் சிவன் இருக்கும் உலகம் என வலியுறுத்திக் கூறுவது திருவாதவூரடிகள் புராணம். சிவனை வழிபடுவோர் தமிழர் என அறுதியிட்டு உரைப்பது மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிககாலம். அதாவது கி. மு. 5000 ஆண்டுகட்கு முற்பட்ட நாட்களிலே சிவபெருமானுல் அருளிச் செய்யப்பட்ட சிறப்பினை உடையது சிவாகமநூல்கள். அவை 28. அவையாவன.

1. காமிகம்
2. யோகஜம்
3. சிந்தியம்
4. காரணம்
5. அசிதம்

ஐந்து ஆகமங்களும் கௌசிக முனிவருக்கு உபதேசிக்கப் பெற்றன.

6. தீப்தம்
7. சூக்குமம்
8. சகச்சிரம்
9. அஞ்சுமான்
10. சுப்பிரபேதம்

ஐந்து ஆகமங்களும் காசிப முனிவருக்கு உபதேசிக்கப் பெற்றன.

11. விசயம்
12. நிசுவாசம்
13. சுவாயம்புவம்
14. ஆக்கினேயம்
15. வீரம்

ஐந்து ஆகமங்களும் பரத்துவாச முனிவருக்கு உபதேசிக்கப் பெற்றன.



16. இரௌரவம்
17. மகுடம்
18. விமலம்
19. சந்திரஞானம்
20. முகவிம்பம்

ஐந்து ஆகமங்களும் கௌதம முனிவருக்கு உபதேசிக்கப் பெற்றன.

21. புரோற்கீதம்
22. இலளிதம்
23. சித்தம்
24. சந்தானம்
25. சர்வோர்த்தம்
26. பாரமேசுவரம்
27. கிரணம்
28. வாதுளம்.

எட்டு ஆகமங்களும் அகத்திய முனிவருக்கு உபதேசிக்கப் பெற்றன.

இச்சிவாகமங்கள் சிவபெருமானுல் அருளிச்செய்யப் பெற்ற சிறப்பினை உடையன. ஆன்மாக்கள் அறவாழ்வை மேற்கொண்டு உலகியல் இன்பங்களை அனுபவித்து அவை யாவும் சிற்றின்பம் என அனுபவ வாயிலாகக் கண்டுணர்ந்து மேலான பேரின்பத்தை நாடி மனத்தூய்மை பெற்றுப் பிறவிப் பிணியிலிருந்து விடுதலை அடையும் நெறியினை எடுத்துக்கூறுவன சிவாகமங்கள். இச்சிவாகமங்கள் சித்தாந்தம் எனவும் அழைக்கப் பெறுவன. சிவாகமங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே சரியை. கிரியை, யோகம்,ஞானம் என நான்கு பாதங்களாக வகுக்கப்படும். நாம் எமது வாழ்விலே என்றும் இன்பமாக வாழ்வதற்கு ஏற்ற வழியை வகுத்துத்தருவன. சிவாகம நூல்களிலே கூறப்பட்ட உண்மைகளை நன்குக அறிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் நாளடைவிலே குறையத்தொடங்கி விட்டது. காரணம் சிவாகமங்களின் ஞானகாண்டம் முப்பொருளின் உண்மையை வலியுறுத்தியமையாகும். முப்பொருளின் உண்மையிலே சிவன், ஆன்மா, பாசம் மூன்றினையும் தெளிவாக விளங்கப்படுத்தப்பட்டிருப்பதை நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. சிவனும், ஆன்மாவும், பாசமும் என்றும் அழியாத தன்மையின என்று எடுத்துக் காட்டப்

பட்டுள்ளன. ஒன்று மற்றொன்றாக மாறுவதில்லை. ஒன்றினது அனுபவத்தை மற்றது பெறுவதில்லை. ஐம்புல வழக்கின் அருஞ்சுவை அறியாச் செம்பொருட் செல்வனாகவே சிவன் இருக்கின்றான். அவன் விருப்பு வெறுப்பு அற்றவன். இயல்பாகவே அவன் பாசங்களிலிருந்து நீங்கியவன். அவனைப்பாசம் பற்றுவதில்லை. ஆனால் ஆன்மா இயல்பாகவே பாசத்துடன் பற்றியது. பாசம் செழிம்பு போல்வது. ஆன்மா செம்பு போல்வது. செம்பிலே செழிம்பு நீங்காதிருப்பது போல ஆன்மாவிடத்திலே ஆணவமலம் நீங்காதிருப்பது; மலசம்பந்தமான ஆன்மா மலரகிதராகிய சிவனாவதில்லை என்னும் உண்மையினை வலியுறுத்திக் கூறுவன சிவாகம நூல்கள். அனாதியாகவே நித்தியமாயுள்ள முப்பொருள் உண்மையினை எடுத்துக்கூறிய சிவாகம நூல்கள் ஆன்மா சிவனாவதில்லை எனத் தெளிவுபடுத்தியதுடன் அமையாது ஆன்மா பிறவி எடுப்பது, அனுபவிக்கும் இன்பதுன்பநிலை முத்தியின்பமாகிய பிறவிப் பெருங்கடலிலிருந்து கரை ஏறும் வழியாவற்றையும் மிக இலகுவான முறையிலே எமது நல்லறிவு வளர்ச்சிக்காகவே எடுத்துக் கூறுகின்றன.

நாம் எப்படிப் பிறக்கிறோம் என்பதிலே பலவிதமான கருத்துக்களும் பலராலும் தெரிவிக்கப்படுகின்றன. இறைவன் என்னை இப்படியாகப் பிறக்கும்படி செய்தான், என்று ஒரு சிலர் தம்மை இறைவன் படைத்தான் என்று கூறிக் கொள்ளுவர். தமக்கு ஏதாவது துன்பம் நேர்ந்ததென்றவுடனே இறைவன் இப்படியாக என்னை வருத்துகின்றானே என்று இறைவனையே நொந்துகொள்கின்றனர் வேறு சிலர் இறைவனையே திட்டுகின்றனர். தம்மை வேதனை அடையும்படி விட்ட சிவன் உயிருடன் இருக்கிறானா என்றே கேட்கத் துணிந்து விடுகின்றனர். ஔவையாரே கேட்டு விட்டாரே "இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனுமென் செத்துவிட்டானோ?" என்று தமது முதற் பாட்டிலேயே கேட்டு அதற்குவிடை கூறுவது போல. "முட்ட முட்டப்பாரம் அவனுக்கன்னாய் — நெஞ்சமே அஞ்சாதேநீ" எனத் தாய்க்கு ஆறுதல் கூறியதான செய்தி



எமக்குத் தெரிந்ததே. இந்தச்செய்தியில் சைவசித்தாந்த உண்மைக்குப் புறம்பான செய்தி தெரிவிக்கப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். "இட்டமுடன் எழுதினான் என்று கூறும்போதே இறைவன் விருப்பு வெறுப்பு உள்ளவன் ஆகிறான். பற்றுடையவன் என்றால் அவனுக்கும் மனிதனுக்கும் வித்தியாசம் இல்லை என்று கூறுகின்ற ஏகாத்மவாதம் புகுந்து விடுகிறது. உண்மையிலே ஏகாத்மவாதம் வைணவத்துடனும் மகாபாரதத்துடனும் தோன்றிய விதண்டாவாதக் கொள்கையாகும். இந்த ஏகாத்மவாதக் கொள்கை பிழையானது என்று காலத்தால் மகாபாரதத்திற்கு முற்பட்ட தொன்மையான சைவசித்தாந்தம் வலியுறுத்திக் கூறுகிறது. விஷ்ணுவும் பிரமாவும் அடிமுடி முறையே தேடிக் காணொணாதவன் சிவன் என்ற கருத்துத் தெரிவிக்கும் போதே சைவசித்தாந்தம் ஏகாத்மவாதத்தை முற்றாகக் கண்டிக்கிறது. ஜீவாத்மா பரமாத்மா ஆகிறது என்ற கருத்தைக் கூறுவது ஏக ஆத்ம வாதம். இதனால் உலகிலே நாத்திகவாதம் தோன்றிப் பரவலாயிற்று. நீ அதுவாகிறாய் என்னும் போது நீயே அது. ஆதலினால் அது என்று ஒன்று இல்லை, எனக் கூறுவது நாத்திகம். மாணிக்கவாசகசுவாமிகள் ஆத்தமானார் அயலவர்கூடி நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர் என்று குறிப்பிடுவது ஏகாத்மவாதத்தின் விளைவே என்பதை அறியலாம்.

"என்றுநீ அன்றுநான் உன்னடிமையல்லவோ" என மணிவாசகசுவாமிகள் கேட்டு சைவசித்தாந்த முப்பொருள் உண்மை விளக்கத்தைச் சுருக்கமாகக் கூறி விடுகிறார். இறைவன், ஆன்மா இரண்டும் நித்தியம் என்பதையும், ஒன்று மற்றொன்றாவதில்லை என்பதையும், ஆன்மா இறைவனது திருவருளிலே தங்கியிருக்கிறது என்பதையும் திருவாசகம் சந்தேகவிபரீதமின்றித் தெளிவு படுத்துகின்றது.

"திருவருள்" என்றால் என்ன என்று மாணிக்கவாசக சுவாமிகள் விளக்கம் கூறுகின்றார். "உணர்ந்தார்க்குணர் வரியன் தில்லைச்சிற்றம்பலத்தான் குணந்தான் வெளிப்பட்ட தோர் கொவ்வைச் செவ்வாய் இக்கொடியிடை" எனப் பொன்னம்பலத்திலே அனவரதமும் ஆனந்தத்தாண்டவம் செய்து ஆன்மாக்களுக்கு முத்தியின்பம் கொடுக்கும் நடராஜப் பெருமானது அருகே வீற்றிருக்கும் சிவகாமசுந்தரியம்பாளை வருணிக்கும்போது, உலகனைத்திலும் உள்ள ஆன்மகோடிகளைப் பெறாதுபெற்றும் என்றும் கன்னியாகத் திகழும் அம்மையார் என்றால் அவளே உலகமுதல்வராய், ஒன்றாய், உடனாய், வேறாய் அனைத்துலகையும் இயக்கி நின்று கருணை பாலித்தருளும் நடராஜப்பெருமானது குணமே பெண் உருவாக வெளிப்பட்டு அவன் அருகே நின்று அவனது அருளாடலை ஆமோதித்துக் கொண்டிருக்கும் அருட்சத்தி என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

அந்தத் திருவருளைப் பெறுவதற்குச் சிவனை வணங்க வேண்டும். சிவனை வணங்கித் திருவருளைப் பெறுவதற்கு எவருமே காட்டுக்குப் போகவேண்டியதில்லை. கடமைகளை, பொறுப்புகளைக் கைவிட வேண்டியதில்லை. யாரையுமே பகைக்க வேண்டியதில்லை. எவரையுமே வெறுக்க வேண்டியதில்லை. திருவருளைப் பெறுவதற்கு முதல் வேண்டியது மனத்தூய்மையே எனத் திருவள்ளுவப் பெருந்தகையார் குறிப்பிட்டுள்ளார். மனத்தூய்மை பெறுவதற்கு ஆணவவலி கெடுதல் வேண்டும். ஆணவவலிகெட மனதைப் பக்குவப்படுத்துதல் வேண்டும். மனப்பக்குவம் அடைவதற்கு நான்கு வழிகள் சைவ மார்க்கங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவதாகச் சொல்லப்பட்டது சரியை நெறியாகும். சரியை நெறியில் நிற்பவர்கள் வாழ்க்கையில் தமது கடமைகள் யாவற்றையும் செய்துகொண்டு இறைவழிபாட்டிலும் ஈடுபடக் கூடியதாக அமைந்திருப்பதை யாவரும் அவதானிக்கலாம். அப்பரடிகள் சரியைத் தொண்டுபற்றி ஒரு தேவாரத்திலே அழகாக எமக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றார். "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா நித்தலும் எம்பிரானுடைய கோயில்



புக்கு புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா சய போற்றி போற்றி" என்றும் "அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ" யென்றும் "ஆரூரா என்றென்றே அலறா நில்லே" என்றும் தேவாரத்திலே ஆலயத்திற்குச் செல்லுதல், ஆலயத்தைச் சுத்தம் செய்தல், மெழுகிடல், அலகிடல், நந்தவனம் அமைத்தல், மலர்கள் பறித்தல், மாலைகட்டிக் கொடுத்தல், ஆண்டவனுடைய புகழ் பாடுதல், வணங்குதல், இறைவனது பெயர்களைச் சொல்லித் துதித்தல், பல அற்புதங்களைச் செய்வதற்கு உதவிய இறைவன் திருவருளுக்கு அடிமையாயிருந்த அடியவர்களான நாயன்மார்கள் எமக்காகப் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களை அன்போடு ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை செய்து பாடுதல், ஆடுதல், பரவசமாக நிற்றல் இவை எல்லாம் சரியைத் தொண்டாக அமையும். யாவராலும் இலகுவில் செய்து கொள்ளக்கூடியது, சரியைத் தொண்டு செய்வதற்கு மனம் மட்டுமே வேண்டும். ஆலயத்திற்குப் போகவும் இறைவன் பெயர் பாடவும், தேவஸ்தானத்திலே வழிபாடு செய்யவும், கூட்டுப் பிரார்த்தனையிலே பங்கு பற்றவும் எமக்கு மனவிருப்பம் இருத்தல் வேண்டும். மனம் உண்டேல் இடம் உண்டு. அறம் செய் என்று கூறுவதற்குப் பதிலாக ஒளவைப் பிராட்டியார். "அறம் செய்ய விரும்பு" என்று மட்டுமே கூறினார். அறம் செய்ய விரும்பினால் தானாகவே அறம் செயற்பட்டுவிடும் என்னும் உண்மையைத் தெளிவுபடுத்தும் விதமாக விருப்பத்தைக் கூறி விரும்பினால் செயல் தானாக நிகழும் என்பதை உய்த்துணர வைத்த பெருமை ஒளவையாருடையது.

ஆலயத்திற்குப் போக விரும்புவது ஒன்றுதான் எமக்கு முதலில் தேவையானது. விருப்பம் வந்து விட்டால் ஏனையவை தானாகவே நிகழ்வனவாம். அருணகிரிநாதர் முருகனை வணங்கி இகபரசௌபாக்கியம் அருள்வாயே எனக் கேட்கிறார். இந்த உலகத்தில் வாழும் காலத்திலே மேலான சுகமும், உலக வாழ்வு முடிந்தபின் முக்தியின்பமும் கிடைக்க

வேண்டும் எனக்கேட்கும் நிலை எமக்கு மிகவும் பொருத்த மானதாகும்.

எமது பிறவி எப்படி அமைகிறது என்று எம்மை நாமே கேட்டுத் தெளிவு பெறுதல் அவசியம். எமது செயல்களே எமது பிறவிக்குக் காரணம். நற்செயல்களால் நற்பயனும் அதன் விளைவால் நற்பிறவியும் எமக்குக் கிடைக்கும். இவ் விதமாக எமது பிறவிக்கு ஏதுவாக அமைவது நாமே செய்து கொண்ட பிராரப்த கர்மவினை. பிராரப்த கர்மவினை என ஒன்று அமைந்து எமக்கு தாய் தந்தை, கருவி, கரணங்கள், அனுபவிக்கும் சுகதுக்கம் ஆகிய அனைத்தையும் எமக்கு ஏற் படுத்திக் கொடுக்கின்றதை நாம் அறியாத காரணத்தினாலே நாம் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழ முயல்கிறோம். மற்றவர்களை ஏமாற்றிப் பிழைப்பதை எமது சாமர்த்தியமாக நாம் கருதி விடுகிறோம். இதனாலேயே உல கத்திலே கொலை, களவு, விபசாரம், பொய் முதலான தீய செயல்கள் நிகழ்கின்றன. இதனைக் கண்டிக்கும் வகையிலே திருவள்ளுவர் “ தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்த பின் தன்னெஞ்சே தன்னைச் சுடும் ” என அறிவுரை கூறு கின்றார்.

எமது பிறவிக்கு நாமே காரணமாகிறோம். “ தினை விதைத்தவன் தினை அறுப்பான் ” என்ற முதுமொழியும் இதே கருத்தினை எடுத்துக் கூறுவதை நாம் காணலாம். இறைவன் எமக்கு அருள் பொழிவதற்குக் காத்திருக்கிறான். எமக்கு நன்மைசெய்யக் காத்திருக்கும் இறைவனைச் சரி யாக உணர்ந்து கொள்ளாது அந்த இறைவனையே குறை சொல்லித் திட்டி எமது தீயவினைப்பயனாகத் துக்கம் அனு பவிக்கும்போது யாரோ எமக்குத் துன்பத்தைச் செய்கிறார்கள் எனத் தவறாகக் கற்பித்து அதிலே ஒரு நிம்மதி பெறுவ திலே திருப்தி அடைந்து விடுகிறோம்.

“ தீதும் நன்றும் பிறர்தர வாரா ” என்னும் புறநானூற் றுப் பாடலைச் சிறிது கருத்தூன்றிக் கவனித்தால் எமக்கு உண்மை தெற்றெனப் புலப்படும். எமக்கு உரிய நன்மை, தீமை இரண்டையும் நாமே தேடிக்கொள்கிறோம். என்றும்



சுகத்தை அனுபவிக்கவே எவரும் விரும்புவர். எனினும் பிறருக்குத் தீமை விளைவிக்கும் செயல்களைச் செய்து அதில் தனியான சுகத்தை அனுபவிப்பதாக எண்ணிக் கொள்ளும் போது “பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா, பிற் பகல் தாமே வரும்” என்னும் வள்ளுவனாரது வாக்கினை மனதிலே நிறுத்தினால் யாருக்குமே தீங்கு செய்ய மனதினா லும் நினைக்காத தூய உள்ளத்தை வளர்த்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை நன்கு தெரிந்தவர்களாவோம். “ எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே ” என்ற தாயுமானார் பாடல் எமது சிந்தனைக்கு நல்விருந்து.

மனம் தூய்மை பெறுதற்கு மனம் எதையாவது தியா னித்தல் அவசியம். அப்படித் தியானிப்பதற்கு மிக உகந் தது என்றும் இன்ப வடிவினனாக ஆன்மாக்களுக்கு என் றும் முத்தியின்பத்தை வழங்கக் காத்திருப்பவனாகிய சிவன் கழலே என அறிந்து கொண்டால், அவன் கழல் வணங்கும் நெறியில் நாம் ஒழுகுதலே பிறவிப் பெரும் பயன் என நாம் அறிந்து கொள்வோம். சரியைத்தொண்டு அதனையே எடுத்து விளக்கிக் கூறுகின்றது. இல்வாழ்க்கையில் ஈடு பட்டு உலகியல் கடமைகள் அனைத்தையும் எவ்வித குறை பாடுகளுமின்றி நிறைவாகச் செய்துகொண்டு சிவன்கழலே சிந்திக்கும் சிவநெறிச்சீலராக வாழ் முயலுதலே எம்மை மேலான தவநெறியில் உய்த்துவிடும். இந்தச் சிறந்த வழி யைச் சிவபெருமானே திருவாதவூரடிகளுக்குக் குருவடிவாக எழுந்தருளிவந்து திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழ லின்கீழ் இருந்து உபதேசம் செய்யுபோது விரிவாக எடுத்து உரைக்கினறார்.

ஆவ லாலெமக் காமலர் மரங்க
ளாக்கலம்மலர் பறித்தலம் மலராற்
றுவி லாவகை தார்பல சமைத்த
றணப்பி லெம்புகழ் சாற்றலன்புடனா
மேவு மாலய மலகிடன் மெழுகல்
விளங்க நல்விளக் கிடுதலெம்மடியார்க்
கேவ லானவை செய்தலிச் சரியை
யியற்ற வல்லவர்க் கெம்மூலகளிப்போம்.

பூந்தோட்டம் அமைத்தல், பூ எடுத்தல், மாலை தொடுத்தல், சிவன் கழல் துதித்தல், ஆலயத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தல், அலகிடல், மெழுகுதல், விளக்கு ஏற்றல், இவற்றுடன் சிவனடியார்களுக்கு வேண்டிய தொண்டு செய்தல் ஆகியன சரியை நெறியில் அடங்கும். இச்சரியைத் தொண்டு செய்வோருக்கு சாலோகவாழ்வு கிடைக்கும் என இறைவனே அருளிச் செய்வாராயினர்.

இறைவனை வழிபாடு செய்வதற்கு அதற்கென வமைந்த ஒரு நேரத்தைக் குறிப்பிட்டு அதன்படி வழிபாடியற்றுதல் சிறந்தது. ஆயினும், ஆண்டவனை வழிபடுவதற்கு ஒரு நேரத்தை வகுத்து ஒதுக்க முடியாதவர்களது நிலையினையும் கருத்திற்கொண்டு சிவஞானசித்தியார் என்னும் நூலிலே "நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் சிவன்தாள் நினை" யெனக் குறிப்பிடப்பட்டிருப்பதும், அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியிலே

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்நினைப்பதுன்னை
என்றும் வணங்குவதுன் மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் தரும்பொருளே யருளே உமையேயிமையத்
தன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே"

எனவும் கூறியிருப்பது எம்மை நல்வழிப்படுத்துவதற்கே.

சரியைத் தொண்டிலே முதலாவதாக விளங்குவது ஆலயத்திற்குச் சென்று இறைவழிபாடியற்றுதலே. சிவஞான போதம் 12-ம் சூத்திரத்திலே இக்கருத்து மேலும் தெளிவு படுத்தப்படுகிறது.

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே"

எனக்கூறுவதனாலேயே, ஆன்மா மலசம்பந்தமுடையது. ஆதலினாலே பசுஎன அழைக்கப்படுகிறது. இறைவனது பாதாரவிந்தங்களைச் சேரவிடாது தடுத்து ஆன்மாவைப்



பிறவி ஆக ஆற்றிலே உழல விடுவது ஆணவமலம். அந்த மலத்தின் தீநெறிப்பட்டு வாழ்வை அவமாக்காது தவநெறிப்பட்டு இறைவனது கழலிணைகளைப் பற்றி நிற்கும் அன்பர்களது கூட்டத்திலே சேர்ந்து கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகி என்றும் நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும் எப்போதும், அனைத்திலும் ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையான் கழல் இறைஞ்சி உலகியல் மயக்கம் பொருந்தி அதிலேயே கிடந்து அழுந்தும் நிலைநீங்கிய சிவன்கழல் சிந்திக்கும் சீர்மையுடைய அன்பர்களது தவவேடப்பொலிவினைக் கண்டு சிவனடியார்களை, விபூதி, உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களைத் தாங்கியிருக்கின்றவர்களைக் கண்டு, சிவனாகவே அவர்களை வணங்கி, உபசரித்து, அன்பு பூண்டு மெய்நெறி நிற்கும் அடியவர்களையும், சிவாலயங்களையும் சிவனாகவே வழிபடுதல் சரியை நெறியின் தன்மைகளாகும்.

இவ்விதமாகச் சரியைநெறி நின்று வழிபடுபவர்கள் ஆணவமல இருளை நீக்கியவர்களாவர். உருப்பெலாதவர், இழிகுலத்தவர், நல்ஒழுக்கம் இல்லவர் என்றும், நம்அளவில் விருப்பிலாதவர் எனினும், மெய்நீறு மிக்கசாதன வேடமுங் கண்டால் தரிப்பிலாது சென்று எதிருற வணங்கித் தக்க போனகம் அளித்து, அவர்க்கெளிதாய் இருப்பர் தாம் அவர் அடியவர்க்கடியர் என்பர். யான் எனதெனுஞ் செருக்கறுப்பர். (திருவாதவூரடிகள் புராணம்) என இறைவனே திருவாதவூரருக்குக்கூறியதிலிருந்து, சரியைவழி நின்று இறைவனை ஆலயங்களிலே வழிபடுவதும், சிவனடியார்களையும், சிவசின்னங்களாய விபூதி, உருத்திராக்கம் முதலியன தரித்த அடியவர்களையும் கண்டால், அவர்களையும் சிவன் எனவே வழிபாடு செய்வதும், அவர்களுக்கு உணவு முதலான உபசரணைகள் செய்வதும் சரியைத்தொண்டின் கீழ் அமையும். அவ்விதமாகச் சரியைவழி நிற்பவர்கள் ஆணவமலத்தின் வலிகெடுத்தவராவர். ஆணவமல வலிகெட்ட நிலை முத்திநிலையாகும். முத்திநிலை எய்தியவர்கள் மீண்டும் மாதா

உதரத்திலே புகுந்து பிறவி எடுப்பதில்லை. இதனையே திருவருட்பயன் என்னும் நூலிலே உமாபதிசிவாசாரியார் அருளது நிலையில்—

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான் "

என எடுத்து ஓதினார். இறைவனது நிலை பிறப்பு, இறப்பு அற்ற நிலை. ஆன்மாக்கள் பிறப்பு, இறப்பு அற்ற நிலையினை அடைவதற்கு அருள்புரியவே இறைவன் திருவருட் சக்தியுடன் பிரியாது இருக்கின்றான். அவன் அருளாலே அவன்தாள் வணங்கி நிற்கும்போது, தானேவந்து எம்மைத் தலையளித் தாட்கொண்டருளும் வான்வார் கழல் உடன் நிலந்தன் மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி உலகியலிலிருந்து பேதித்து நம்மை வளர்த்தெடுத்து உய்யுநெறி காட்டுவான் இறைவன். உய்யுநெறி தந்த பித்தனாக அவன் இருக்கின்றான். அவனை வணங்குவது எம்மை நன்னிலைப் படுத்தற்கே.

எனவே, சிவன்கழல் வணங்கிச் சரியைநெறி நின்று திருவருள் கைவரப்பெற்று இகபர சௌபாக்கியம் பெறுவோமாக.

இவ்வருட மார்கழி மாதம் திருவெம்பாவை நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட அன்பர்களுக்கு உதவும் பொருட்டு திருவெம்பாவைப் பாடல்களை ஒரு கையடக்க நூலாக அச்சிட்டு, திருவருள் இயக்கத்தினர் இலவசமாக விநியோகஞ் செய்தனர். கொழும்பில் பஜனை நடந்த பல இடங்களுக்கும், யாழ்ப்பாணத்திலும் இம் மலர் கொடுக்கப்பட்டது. அடுத்து வரும் திருவெம்பாவைக் காலத்தில் பயன்படுத்த இம்மலரை எம் இயக்க விலாசத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

# தமிழ்ச் சமய நெறி

— தவத்திரு குன்றக்குடி அடிகளார் —

தமிழ், காலத்தால் மூத்தமொழி; கருத்தாலும் முதிர்ந்த மொழி; தமிழில் இன்றுள்ள முதல் நூல் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல். தொல்காப்பியர் காலம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. இலக்கியம் தோன்றி வளர்ந்த பின்புதான் இலக்கணம் தோன்றும் என்பது மொழிநூற் கொள்கை. தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கண நூலைத் தரத்தக்க அளவுக்குத் தொல்காப்பியத்திற்கு முன் இலக்கிய உலகம் சிறந்து விளங்கி இருக்க வேண்டும். மிகச்சிறந்த இலக்கியங்களைக் காணக்கூடிய அளவுக்குத் தமிழ்மொழி சிறந்திருந்ததென்றால், அம்மொழியைப் பேசி வாழ்ந்த மக்கள் சிந்தனையிலும் செயலிலும் மிக வளர்ந்திருக்க வேண்டும் என்பது உய்த்துணரத்தக்கது. உலகிலுள்ள எல்லா மொழிகளுமே எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் பெற்றுள்ளன. அவற்றுள்ளும் எழுத்து, சொல்லிலக்கணங்களிற் கூட முழுநிலை பெற்று விளங்கும் மொழிகள் சிலவே. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமல்லாமல் வாழ்க்கைக்கும் இலக்கணங்கண்ட பெருமை உலக மொழிகளில் தமிழுக்கே உண்டு

வாழ்வதெல்லாம் வாழ்க்கை அல்ல. வாழ்க்கை அருமையானது; பயனுடையது; இன்பத்திற்குரியது என்ற உணர்வுகளுடன் நெறிகளோடு இசைந்து வாழ்தலே வாழ்க்கை என்று தமிழ் வற்புறுத்துகின்றது. ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்கின்ற காதல் வாழ்க்கையும், அவர்களே சமுதாயத்திற்குப் பயன்படுமாறு வாழும் கற்பு வாழ்க்கையும் அகவாழ்க்கை. சமுதாய வரம்புக்குள் அடங்கி, அரசு வகுக்கும் சமுதாயப் பொதுவிதிகளுக்கு இணங்க வாழும் வாழ்க்கை புறவாழ்க்கை. சுருங்கச் சொன்னால் சமுதாயமாக வாழ்வது புறவாழ்க்கை. சமுதாயத்திற்கு உறுப்பாகச் செய்வன செய்து, துய்ப்பன துய்த்து வாழும் வாழ்க்கை அகவாழ்க்கை.

இது, தொல்காப்பியம் காட்டும் முடிவு; இவ்விலக்கண நூல் தோன்றுவதற்கு முன்பே, தமிழ்மொழி பேசும் மக்கள் சிறந்த வாழ்க்கை உடையவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆயினும், காலத்தின் விளைவுகளால் இங்கும் அங்குமாகத் தவறுதல் தலைகாட்டத் தொடங்கிய உடனேயே வாழ்க்கையைச் செப்பம் செய்யுங் கவலை தமிழ்க் குடியினருக்குத் தோன்றியதன் விளைவு, தொல்காப்பியத்தின் பொருளதிகாரம்.

வாழ்க்கை, நெறிமுறைகளுக்கு இசைந்தவாறு அமைய வேண்டும் என்ற கவலை அரும்பும் நிலையே சமயத்தின் தோற்றம். இந்நிலையிலேயே சமயம் கால்கொள்ளுகிறது. அங்ஙனமாயின் தொல்காப்பியத்திற்கு முன்பு, தமிழர்க்குச் சமயமில்லையா? என்ற வினாத் தோன்றும். தொல்காப்பியத்திற்கு முன்பும் தமிழ்மொழி பேசிய மக்கள் இறைவழிபாடு செய்து வந்துள்ளனர். அவர்களுடைய வாழ்க்கையில் ஒழுங்குகளும், ஒழுக்கங்களும், சமயநெறிக் கோட்பாடுகளும் இருந்தன. ஆயினும், செப்பமாக வடிவமைப்புப் பெற்றது தொல்காப்பிய காலத்திலேதான். சமயம் என்பதற்குச் செப்பமுறச் செய்யப்பெற்றது, சார்ந்து நின்று ஒழுகுவோரை செப்பமுறச் செய்வது என்பது விளக்கம். சமயம் என்பது கடவுளை வழிபடும் நிலையை மட்டும் வற்புறுத்துவது அன்று; வாழ்க்கை முழுவதையும் தழுவி நிற்பதே சமயம்.

தமிழ்மொழி, வாழ்க்கையை அணுகி ஆராய்ந்த முறை நம்பிக்கைக்குரியது. நல்லெண்ணத்தின்பாற் பட்டது; அறிவார்ந்தது. தமிழ்ச்சமயத்தில் நம்பிக்கைக் கொள்கை உண்டு. ஆனால் நம்பிக்கை மட்டுமேயன்று. தமிழ்ச்சமயநெறி உலகை உயிர்க்குலத்தை, வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து கண்டு காட்டும் முடிவுகள் சிறப்புடையன; அறிவிற்கு விருந்தாய் அமைவன. உயிர்கள் அறியாமையிலிருந்து விலக, துன்பத் தொடக்குகளில் இருந்து விலக, சமயம் துணைசெய்வது தமிழ்ச்சமயம் உயிரை நம்புகிறது. உயிர், இல்பொருள் அன்று. உயிர் பிறிதொன்றன் விளைவுமன்று. உயிர், கடவுளுமன்று; கடவுளின் ஒரு பகுதியுமன்று, உயிர் கடவுளின் பிரதிபலிப்பு. உயிர் கடவுளாற் படைக்கப்பட்டதுமன்று.



அழிக்கக்கூடியதுமன்று. உயிர் கடவுளின் கைப்பாவையுமன்று. உயிர் அறிவுப்பொருள். ஆயினும் உயிர் முற்றாக அறிந்த அறிவுப்பொருளுமன்று. உயிர் ஒன்றல்ல, பலப் பல. அதன் பொதுவ்கை ஆறுவகையே! இப்பாகுபாடு அறிவின் அடிப்படையில் அமைந்தது. உயிர்கள் தோன்றியனவுமல்ல; அழியக்கூடியனவுமல்ல, உயிர்களுக்குப் பிறப்புமில்லை; இறப்புமில்லை. உயிர்கள் கடவுளாவதுமில்லை. உயிர்கள் உடலைத்துணைக் கொண்டு அகக்கருவிகள், புறக்கருவிகள் வாயிலாக உலகத்தோடு தொடர்பு கொள்ளுதலையே பிறப்பு என்கின்றோம். இது தமிழ்ச் சமயத்தின் உயிரைப் பற்றிய உயர் தனிக்கொள்கை.

உயிரின் இயற்கை வளர்தல்; மாறுதல். உயிர்களின் அடிப்படை இயல்பு துய்ப்பது. துய்த்தலும், இன்புறுதலும் அவ்வழி வளர்தலும், அன்பு நிலையை எய்துதலும் உயிர்களின் பிறப்பு வழிப்பட்ட நோக்கம். உயிர்கள் பிறத்தல், இறத்தல் என்பது நேரடியாக உயிர்களைப் பற்றியதல்ல. உயிர், தன்னுடைய வளர்ச்சிக்குத் துணையாக உடலைத் துணைகொண்டு அறிகருவிகள், செய்கருவிகள் வாயிலாக உலகத்தோடு பொருந்துதலும் நீங்குதலுமே பிறப்பு, இறப்பு ஆகும். இங்ஙனம் அறிகருவிகளையும் செய்கருவிகளையும் உடைய உடம்பினோடு உயிரைப் பொருத்திப் பிறப்பு வாழ்க்கையோடு இணைத்தலே படைத்தலாகும். உடலைப்பெற்ற உயிர்கள் துய்ப்பனவும் உய்ப்பனவும் பெற்று வளரச்செய்தலே காத்தலாகும். வாழ்க்கையில் துன்பச்சுமை குறைவதற்காகவும், புத்துணர்ச்சியோடு வளர்வதற்காகவும், மறைக்கத்தக்கனவற்றை மறைத்தலே மறைத்தலாகும். உயிர்களின் இன்ப வாழ்க்கைக்கு ஒவ்வாத தீமையை அழித்தலே அழித்தலாகும். வளர்ந்துவரும் உயிர்கள் என்றும் இன்ப நிலையில் அமர்ந்து வாழச் செய்தல் அருளுதல் ஆகும். இவ்வாறு உயிர்களின் வாழ்நிலைகளை ஐந்து நிலைகளாகவும், இவ்வைந்து நிலைகளிலும் உயிர்களுக்குத் துணைசெய்யும் ஐந்தொழில்களே கடவுளின் ஐந்தொழில்கள் என்றும் தமிழ் கூறும்.

உயிர்கள் உய்யும் நலன் நோக்கி உடுத்துக் கொண்டதே உடம்பு. உடு என்ற முதனிலையிலிருந்தே உடம்பு என்ற

சொல் பிறக்கிறது. உயிர் அறியும் இயல்பினது. உயிர் ஓர் அறிவுப்பொருளே! ஆயினும் இயற்கையிலேயே அறியாமையில் உயிர் இணைந்து இருக்கிறது. உயிர், அறியாமையினின்றும் விலகி அறிவைப் பெறுதலே வாழ்க்கையின் நோக்கம். உயிர், அறிவு மயமாதலே உயிரின் முதிர்ந்த வளர்ச்சி நிலை. உயிர், அறியாமையை நீக்கிக் கொண்டு அறிவைப் பெறுவதற்கே பேரறிவாகிய கடவுளை நாடுகிறது; துணையாகப் பெறுகிறது. வளர்ந்த அறிவின் இயல்பு வாழ்வித்தலே. வளர்ந்த அறிவு, சிற்றெல்லைகளைக் கடந்தது. அதற்குத் தற்சார்பான குறிக்கோள் இராது. எனவே உலகுயிர்கள் அனைத்தையும் தழுவிநின்று மெல்ல அவற்றை அறியாமையிலிருந்து நீக்கி அறிவில் பூத்துக்குலுங்கச் செய்தலும் அறிவில் இன்புற்று அமரச்செய்தலுமே இறைவனின் குறிக்கோள். இது தமிழ்ச்சமயத்தின் சாரம். தமிழர் சமயம், இன்று தோன்றி வளர்ந்துள்ள பொருள்முதல்வாதக்கொள்கைக்கும் ஈடுகொடுக்கும் வகையில் அமைந்த சமயமாகும்; ஏன்? அகநிலைக்கருத்துமுதல்வாதம் என்று சொல்லப் படுகின்ற கொள்கை, தமிழ்ச் சமயத்திற்கு முரணானது. இக்கொள்கையுடையார் பொருள்களே இல்லை; எல்லாம் கருத்துகளின் பிரதிபலிப்பே என்பர். இது நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்று. அடுத்து, புறநிலைக்கருத்துமுதல்வாதக்கொள்கை. இக்கொள்கையுடையார் உயிர் என்று ஒன்று இல்லை; "பரமான்மா" என்று சொல்லப்படுகின்ற கடவுளின் ஒரு பகுதியே ஆன்மா என்பர். பரவெளியாகிய ஆகாயத்தையும் குடத்திற்குள் உள்ள ஆகாயத்தையும் ஒப்புமை காட்டுவர். இவ்விரண்டிற்கும் பொருள் வேறுபாடு இல்லாதபோதும் குடத்திற்குள்ளிருப்பதன் காரணமாக ஏற்பட்ட தன்மை வேறுபாட்டை அவர்கள் அறிகிலர். இக்கொள்கையினால் அவர்கள் "நானே கடவுள்" என்று தருக்கித்திரியும் இயல்பினராகின்றனர், அது மட்டுமா? உலகம் என்ற ஒன்று இல்லை. துய்ப்பனவும் இல்லை; உய்ப்பனவும் இல்லை; எல்லாம் வெறும் மயக்கம் என்பர். உலகம் பொய்யன்று; உயிரும் பொய்யன்று. எனவே இந்தப் பொய்மைக் கொள்கை மயக்கத்தில் பிறந்தது; மயக்கத்தில் ஆழ்த்துவது. இக்கொள்கை



பொருள் முதல் வாதத்தின் முன்னும் தமிழ்ச் சமயத்தின் முன்னும் நிற்க முடியாது புறநிலைக் கருத்து முதல் வாதிகள் கடவுளை நம்புகிறவர்கள்.

உலகிற்கும் உயிர்களுக்கும் புறத்தே கடவுளுண்டு; அது முன்னே தோற்றியது; உயிர் உலகம் எல்லாவற்றையும் அக் கடவுளே படைக்கிறது என்ற கொள்கையினர் இவர்கள். இவற்றுள் கடவுள் உண்டு என்ற கொள்கையையும், அது வளர்ந்த அறிவினது என்பதையும் தமிழ்ச் சமயம் ஒத்துக் கொள்ளுகிறது. ஆனால், உயிர்களும் உலகமும் கடவுளால் படைக்கப்பட்டன அல்ல; உயிர்களும் கடவுளைப்போல் என்றும் உள்ளவை. உலகு இறைவனின் இயக்கவியல் செயல் வழியது. உலகு, முகிழ்த்து விரிவதற்குக் காரணமாக - முதற் களமாக அமைந்துள்ள மாயையிலிருந்து முகிழ்த்ததேயாம். அதாவது தோன்றியதேயாம் என்பது தமிழ்ச் சமயம். உயிர்கள், கடவுளால் படைக்கப்பட்டன என்றால், உயிர்களின் குறைநிறைகளுக்கும் இன்ப துன்பங்களுக்கும் யார் பொறுப்பு? குறைவிலா நிறைவு, கோதிலா அமுது, நன்றுடையான், தீயதில்லான், இன்பமுடையான், துன்பமில்லான் என்று விளங்குகின்றவனாகிய பரம் பொருளால் குறைகளுடைய பொருள் - உயிர் படைக்கப்பட்டது என்று கூறுவது கடவுட் கொள்கையையே குறைபடுத்துவதாகும். இயற்கையின் பரிணாம வளர்ச்சி, குறைகள் நிறைகள் ஆவதேயாம். நிறைகள் குறைகளாவதல்ல. எனவே உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டன அல்ல என்ற தமிழ்க் கொள்கை - உயிர்கள் உற்று அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் கடவுள் பொறுப்பாக மாட்டார். அவைகளின் செயற்பாடே அவற்றுக்குக் காரணம் என்ற தமிழ்க் கொள்கை - பொருள் முதல் வாதத்தினை ஈடுகொடுத்து நிற்கின்ற சிறப்புடைய கொள்கை.

தமிழ்ச் சமயம் வாழ்க்கையை பொய்மை என்றும் கூறுவதில்லை; வெறுத்து ஒதுக்குவதுமில்லை; ஒதுங்குவதுமில்லை. தமிழ்ச் சமயம் வாழ்வாங்கு வாழ வலியுறுத்துவதேயாம். தமிழ்ச் சமயத்தின் கொள்கை, செயல்கள் மட்டுமே பயன் தருவன அல்ல; சிந்தனை இன்றியமையாதது; செயல்களின் நோக்கமே அளவைக்குரியது என்பதாகும். தமிழ்ச் சமயம் இயற்கையோடு இசைந்தது. அது இல்லற வாழ்க்கை தான் உயர்ந்தது என்றோ, துறவற வாழ்க்கைதான் உயர்ந்தது

என்றோ பறை சாற்றுவதில்லை. எந்த வாழ்க்கையாயினும் நெறி முறைகளிற் சிறந்து வாழ்வாராயின் இன்புறுவர் என்பதே தமிழ்ச் சமயக் கொள்கை. எந்நெறியில் நின்றாலும் எத்தொழிலைச் செய்தாலும், சிந்தனையும் செயலும் சிறந்திருக்குமானால் சிறப்புடையதேயாம். செம்பொருளைக் காணத்துணை செய்வதேயாம். துய்த்தல், தூய இன்பத்திற்குத் தடையன்று. ஆனால், மற்றவர் துய்த்தலுக்கு இடையூறாக மற்றவர் துய்க்க வழங்காமல் தானே துய்க்க ஒருப்படுதல் தமிழ்நெறிக்கு முரணானது. ஏந்த வகை வாழ்க்கையாயினும் துய்ப்பித்தல் குறிக்கோளாக இருக்கவேண்டும். அங்ஙனம் வாழும் வாழ்க்கை தமிழ் வாழ்க்கை. இம்மண்ணிலேயே வளர்ந்தநிலையில் இன்ப அன்பினைத் துய்த்து வாழமுடியும் என்ற நம்பிக்கை உடையது தமிழ்ச் சமயம். உயிர்கள் ஞானமயமாகி இன்ப அன்பினில் தங்கி திருவருளைத்துய்த்து இன்புறுதலே வீடு!

இங்ஙனம் வளர்ந்த தமிழ்ச் சமயம் இதுவரையில் உலகில் தோன்றிய தத்துவ இயல்களில் சிறந்ததாக, முடிந்த முடிவாக விளங்கி வருகிறது.

இச்சமய நெறியை, நாம் தமிழ்ச் சமயம் என்று குறிப்பிட்டாலும் இந்நெறி உலகப் பொதுநெறி. தமிழ் மொழிச் சிந்தனையாளர்களிடம் தோன்றி வளர்ந்ததால் தமிழ்ச் சமயமாகின்றது. ஆனால், தத்துவச் சிறப்புகளாலும் கொள்கை உயர்வாலும், நடைமுறை வாழ்வியலுக்கு இசைந்து இருப்பதாலும், எல்லா வேறுபாடுகளையும் கடிந்து ஒதுக்குதலாலும் இத்தமிழ்ச் சமய நெறி உலகப் பொது நெறியாதற்குத் தகுதியுடையது. இந்நெறி உலகப் பொது நெறியானால் கடவுள் நெறியின் பெயரால் ஒருகுலம் தோன்றும்; சமநிலைச் சமுதாயம் மலரும்; வாழ்க்கை, தன்னம்பிக்கையால் ஆள்வினையால் விரிவடையும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று முழங்கி மக்கள் வாழ்வர். பெண்மை பெருமைப் படுத்தப் பெறும், வழுவிலா மனையாம் சிறந்து விளங்கும். பாரம் ஈசன் பணியே எனக்கொண்டு அந்தணர் வாழ்வர். தமிழ்ச் சமயநெறி கால்கொள்ளும். திசையெல்லாம் ஒரு புதிய சமுதாயம் அமைந்து விளங்கும்.

---

(நன்றி: ஐந்தாம் உலகத் தமிழ் மகாநாடு விழா மலர், 1981)

# நம்மைப் பற்றி .... .... ....

## சமய வாழ்க்கை

உலகில் நிலவும் பழைமையான சமயங்களுள் நமது சமயமும் ஒன்றெனப் பெருமையுடன் நாம் கூறிக்கொள்ளுகிறோம்.

இப்பெருமை நமது முன்னோர்களுக்கே பெரிதும் உரித்தாகும். ஏனெனில் அவர்களே இறைவனின் இயல்புகளை ஆராய முற்பட்டனர். ஆன்மாக்களுக்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பையும், உயிர்கள் உண்மைப்பொருளைச் சேருவதற்குத் தடையாக உள்ளவை என்ன, சேருவதற்கு உரிய வழி, அதாவது உலகிலே நாம் வாழும் முறைகள் என்ன என்பவற்றை எல்லாம் எண்ணத் தொடங்கினார்கள்; தமது ஆய்வின் முடிவுகளை பல அனுபூதி நூல்களாக, எமது பரம்பரைச் சொத்தாக வைத்துச் சென்றுள்ளார்கள்.

அன்றாடச் சமய வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டியவை என அறிவுசால் பெரியோர்கள் கூறியவை:

(அ) சமயநூல்களை ஓதுதல்.

(ஆ) இறைவனை வணங்குதல்.

(இ) நல்லோர் நட்பு.

(ஈ) தர்மம்.

சமய நூல்களைச் செம்மையாகக் கற்பதால் கொள்கைகளும் வாழ்வின் இலட்சியங்களும் புலனாகின்றன. விளக்கமில்லாத சமயக்கிரியைகள் மூடப்பழக்கங்களுக்கு வித்திடும். அதுபோல நடைமுறைக்கிரியைகளைப் போற்றாத சமய அறிவுவிளக்கம் வீண் வாதங்களையே உண்டாக்கும். எனவே இவை இரண்டும் அவசியந் தேவை.

சமய அறிவும் கிரியைகளும் எவ்வளவுக்குத்தான் இருந்தாலும் வேண்டாத ஆசைகள் உள்ளத்தைக் கீழ் நிலைக்குக் கொண்டுசெல்ல முயலும். ஆனால் பண்பும் ஆன்மீக ஆர்வமும் உள்ள பெரியோர்களுடன் நட்புக் கொள்ளுவதால் நேர்வழியிலிருந்து நாம் விலகாதபடி சதா விழிப்புடன் இருக்கலாம்.

ஒவ்வொருவரதும் ஆன்மா சிறப்படைய முதல் மூன்று செய்கைகளும் போதுமானவை. ஆனால் மனிதன் தனித்து வாழும் பிராணி அல்ல. அவன் ஒரு சமுதாய 'விலங்கு'. எனவே தனது சத்திக்கேற்ப சமுதாயத்தில் வாழும் வசதி குறைந்தோருக்கு உதவி புரிந்து வாழக் கடமைப்பட்டவன்.

இன்றைய நிலையில் நம்சமயத்தவர்களுக்கு இவற்றைக் கூறினால் "இது எல்லாம் அந்தக் காலத்திற்குச்சரி. எங்களுக்கு இவ்வாறு ஒழுக நேரம் எங்கே? பொருள் வசதி எங்கே?" என்கிறார்கள். மேலும் சமயவாழ்க்கை என்பது ஓர் "ஓய்வுக்காலப்பணி" எனப்பலரும் கூறுவார்கள். மனிதன் இவ்வுலக வாழ்வை நீங்கும் நேரத்திலேயே பரமனை நினைத்தல் வேண்டுமென்பது பலருடைய நம்பிக்கை போலக் காணப்படுகிறது. என்னே அறியாமை! சமயம் என்பது அன்றாடம் வாழவேண்டிய ஓர் அம்சமல்லவா?

தேவையற்ற உலகியல் விடயங்களுக்கு எவ்வளவு நேரத்தையும் செலவிடத் தயாராக இருக்கும் நம்மவர் அண்டங்கள் அனைத்திற்கும் நாயகனும் இறைவனை நினைக்கவும் வணங்கவும் நேரமில்லை என்கிறார்கள். இடாம்பீக வாழ்க்கைக்கும் மனம்போன போக்கிற் கெல்லாம் கூசாமல் பொருளை வாரி இறைக்கும் நாம் என்றென்றும் நமக்குப் பெருமையையும் நிம்மதியையும் கொடுக்கும் தர்மகாரியங்களுக்குச் செலவிடப் பணமில்லை என்கிறோம்.

உலகவாழ்க்கையில் நம்சமயத்தவரை விடப் பிறசமயத்தவர் சமூகப் பொருளாதார நிலைகளில் சிறந்து விளங்குவதேன்? அவர்களைப்போல நம்மவர் உண்மையான தெய்வவழிபாடு செய்யாமல் இருப்பது ஒரு காரணம். நம் சமயத்தவருடன் ஒற்றுமையின்றி, ஒவ்வொருவரும் சுய நலப்போக்கில் வாழ முற்படுவது இன்னொரு காரணம். இவ்வாறாகப் பல உள.

சமயத்தை நாம் அணுகும் முறையில் உடனடியாக ஒரு நன்மாற்றம் தேவை. பல துறைகளிலும் நிர்வாகத்திறமை கொண்ட நாம் சமயத்துறையில் சோர்ந்து காணப்படுவது ஏன்? நம்மவர் மீது ஏதும் சாபக்கேடா? அவ்வாறாக இருப்பினும் உடனே அதனை நீக்கிச் சிறப்புக்களை நிலை நாட்டுவோம் வாரீர்.

—சத்யம்.

(சென்ற இதழில் வெளிவந்த குறிப்பில் இலங்கையின் சனத்தொகை 1·2 கோடி எனவும் இந்துக்கள் ·22 கோடி எனவும் இருக்கவேண்டும். பிழையைக் காட்டிய அன்பனுக்கு நன்றி.)

எமது சமயத்தில் நவக்கிரகங்களை வழிபாடு செய்தலும் உண்டு.
அன்பர்கள் பாராயணஞ் செய்யும் பொருட்டுக் கீழே
நவக்கிரக தோத்திரம் கொடுக்கப்படுகிறது.

**அன்பர்கள் இதனைப் பாராயணஞ் செய்து பயனடைவார்களாக!**

சீலமாக வாழ சீர் அருள்புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி!
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய் போற்றி!

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி.

சிறப்புற மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு.

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
புதந்தரு தருள்வாய் பண்ணொளி யானே
உதவியே அருளும் உத்தமா போற்றி.

குணமிகு வியாழ குரு பகவானே
குணமுடன் வாழ மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் வரகுரு நேசா
கிரஹ தோஷமின்றி கடாக்ஷித் தருள்வாய்.

சுக்கிரனே புத்தி சுகமிக ஈவாய்
வக்கிரமின்றி வர மிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

சங்கடந் தீர்ப்பாய் சனிபக வானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சர வின்றிச் சாகர நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கண்ணியே ரம்மியா போற்றி.

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி.

# நமது பாரம் பரியம்

நம்மிற் பலரும் தத்தமக்குள் பின்வரும் கேள்விகளைக் கேட்பதுண்டு. "நான் எங்கு உள்ளேன்?" "நான் எங்கு செல்கிறேன்?" "நான் என்னவாக இருக்கிறேன்?" "எம்மைச் சுற்றி நிகழும் பலவிதமான நிகழ்ச்சிகளும் அர்த்தமின்றி தற்செயலாக நடக்கின்றனவா? அல்லது இவற்றிற்கு எல்லாம் ஓர் உட்பொருள் உள்ளதா?"

தமக்கென குறிக்கப்பட்டுள்ள வான்பாதைகளிற் செல்லும் கிரகங்களும், ஒருவித இலயபாவத்துடன் ஒழுங்காக நடைபெறும் இரவு, பகல், பருவகாலங்கள் ஆகியவற்றிற்கு ஒரு நியதியை ஏற்படுத்தியது யார்? நாம் வாழும் பூமியாகிய கிரகத்தின் வயது என்ன? இது போன்ற வேறு பல கோளங்கள் உள்ளனவா? அவற்றின் உருவ அமைப்புகள் என்ன? மனிதன் இயற்கையின் அடிமையா அல்லது எசமானனா? அவனுக்கும் அவனைச் சூழ்ந்து கிடக்கும் உலகப் பொருள்களுக்குமிடையே உள்ள உறவு என்ன? இவை யாவும் தற்செயலாகவும், குழப்பான முறையிலும் ஏற்பட்டனவா? அல்லது உலகியற் பொருள்களை நடப்பிக்கும் நியதி ஒன்று உள்ளதா? மனிதனின் செயல்களைக் கட்டுப்படுத்தும் ஒரு நியதி அல்லது பல நியதிகள் உள்ளனவா? அப்படியாயின் அவனுக்கும் அதே நியதிகளுக்கும் உள்ள தொடர்பு என்ன?

இவ்வாறான பொருள் பொதிந்த கேள்விகள் காலத்திற்குக் காலம், கிழக்கு நாடுகளிலும், மேற்கு நாடுகளிலும் வாழ்ந்து வந்த நம்முன்னோர்களாலும் கேட்கப்பட்டன; அவற்றின் உண்மைகள் அவர்களால் ஆராயவும் பட்டன. அவர்களின் கண்டுபிடிப்புகளாகிய அறிவுத் தொகுப்பிற்கு அவர்களின் சந்ததியினராகிய நாம் உரியவராகிறோம்.

மனிதனுள் மறைந்து கிடக்கும் இயல்பு பொருள்கள், இடங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற உந்து முனைப்பாகும். மேற்கு நாடுகளில் மனிதன் தனது



மனதை உலகியற் பொருள்களின்மீது செலுத்தினான். அதன் பயனாக பௌதிகம், இரசாயனம், தாவரவியல், விலங்கியல், மருத்துவம், மின்சக்தியியல், பொறியியல் என்னும் பெரும் விஞ்ஞானத்துறை இயல்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. தான் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்த இயல்புகளை நியதிகள் எனப் பெயரிட்டு அழைத்தான். மேலும், இயற்கை நியதிகளுக்கு ஓர் எல்லையில்லை என்பதையும் கண்டறிந்தான். தான் கண்டு அறிய அறிய மேலும் மேலும் கண்டு அறிவதற்குப் பல விடயங்கள் இருக்குந் தன்மையை அவன் உணரத் தொடங்கினான்.

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஈன்ஸ்றீனைப் பற்றி ஒரு நிகழ்ச்சியைக் கூறுவார்கள். ஒரு முறை யாரோ ஒருவர், அவரைப் பார்த்து, "தாங்கள் மிகப் பெரிய கணித மேதை" எனக் கூறியபொழுது, அவர் கடற்கரையிலுள்ள சிறிது மணலை எடுத்துத் தமது உள்ளங்கையில் வைத்தவாறு, தான் அறிந்தயாவும் கையில் உள்ள சிறிதளவு மணலைப் போலவும், அறியாத எல்லாம் தனது முன்னே பரந்து கிடக்கும் சமுத்திரத்தின் மணல் போன்று மிகுந்து இருப்பதாகக் கூறினாராம்.

இயற்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு நியதிக்குட்பட்டே காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக இரசாயனத்தில் ஒருபங்கு பிராணவாயுவும், இருபங்கு ஹைரோஜனனும் ஒன்றாகும்பொழுது நீர் ஏற்படுகிறது. இந்த நியதி முன்பும் இப்படியே இருந்தது. இப்பொழுதும் இப்படியே இன்னும் ஒரு கோடி ஆண்டுகள் கழிந்த பின்னும் இவ்வாறே இருக்கும்.

நாம் வாழும் பூமி ஒரு கனவட்ட வடிவம் கொண்டது. இது ஒவ்வொரு 365 நாட்களுக்கு ஒரு முறை சூரியனை ஒரு நீள்வட்டமாகச் சுற்றி வருகிறது. மேலும், இதே வேளையில் தன்னைத்தானே 24 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை சுற்றுகிறது. இதனால் அழகான பகற்பொழுதும் அமைதியான இரவுப் பொழுதும் மாறி மாறி நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

ஆகாயவெளியில் இயங்கியபோதும் பூமி எப்பொழுதாவது தனது சூரியனை வலம் வரும் நீள்வட்டப்பாதையிலிருந்து விலகியது கிடையாது. கடந்த காலத்திலும் இன்

றும் இவ்வாறே. எதிர்காலத்திலும் இவ்வாறே. கன வட்ட வடிவமாக ஒரு தோடம்பழம் போல பூமி இருப்பினும் தனது ஆகர்ண சக்தியால் அது உங்களையும் என்னையும் தன்னகத்தே உள்ள எல்லாப் பொருள்களையும் கவர்ந்து வைத்துள்ளது.

எங்கெங்கு திரும்பினாலும் பரிபூரண நியதிகள் நின்று நிலவுவதைக் காண்பதால் மனிதன் மிகுந்த பணிவுடன் இந்த நியதிகளை உருவாக்கிய பேரறிவுக்குத் தலைவணங்குகிறான். அண்ட சராசரங்களை இயக்கும் நியதிகளின் ஒரு சிறு பகுதியையே மனிதன் இது காறும் அறிந்து இருக்கிறான். இன்னும் அறிய வேண்டியவை மிகப்பலவாகும்.

கிழக்கு நாடுகளில் மனிதன் தனது ஆராய்ச்சியை உள் நோக்கி தன்னையே அறியும் பாங்கிற் செலுத்தினான். அவனது உந்து உணர்வு தன்னுள் மறைந்து கிடக்கும் பெருஞ் சக்தியைத் தேடலாயிற்று. இவ்வாராய்ச்சியின் பலனே மாபெரும் சமயங்களான இந்து சமயம், புத்த சமயம், கிறித்துவம், இஸ்லாம் மற்றும் உலகில் நிலவும் சமயங்கள், ஆன்மீக ஆராய்ச்சியில் ஈடுபட்ட பெரும் அறிஞர்கள், தமது ஆய்வின் பலனாக மனிதனின் சுயமான சமூக ரீதியான இயக்கத்தையும் இலட்சியங்களையும் மனிதனின் பிறப்பு, இறப்பு பற்றிய நியதிகளையும், வாழ்வில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளுக்குரிய காரணங்களையும் மனிதனுக்கும் அவனையும் பிறவற்றையும் படைத்தவருக்கும் உள்ள தொடர்பு பற்றியும், என்னும்சாசுவதமாக நிலவும் இன்பத்தைப் பெறும் வழி வகைகளையும் அறிய முற்படலாயினர்.

உலகியல் வாழ்வில் நாம் அனுபவிக்கும் எல்லா நன்மைகளையும் கண்டுபிடித்த விஞ்ஞான மேதையர்களுக்கும், ஆன்மீகத்துறையில் முயன்று நமது உள்மன அமைதிக்கு வழி காட்டிய ஞானிகள் - முனிவர்களுக்கும் எமது மனநிறைவுடன் கூடிய நன்றியைச் செலுத்துவோமாக!

ஆங்கிலத்தில் : எம். முத்துபாலசூரியர், கொழும்பு - 4.
(மொழி பெயர்ப்பு : திருவருள் ஆசிரியர் குழு.)

28-2-81



12-12-80-ல் யாழ்ப்பாணத்தில்
திருவருள் முதற்பிரதியை
ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதஞானசம்பந்த பரமாசார்ய
ஸ்வாமிகளிடமிருந்து
" சிவநெறிக் காவலர் "
திரு. க. கனகராசா அவர்கள்
பெற்றுக்கொள்ளுகிறார்.

"திருவருள்" சஞ்சிகை திருவருள்
நோக்குடன் வளர வேண்டுகின்றோம்.

அலுமினியம் அடிசட்டிகளுக்கு ( வட்டச்சட்டி )
தேவையானோர் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
நியாயமான விலையில் செய்து கொடுக்கப்படும்
அத்துடன் அலுமினியம் வார்ப்புச் சாமான்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

**K. K. இன்டஸ்றீஸ்**

48, பழைய சோனக தெரு

**கொழும்பு-12**

தொலைபேசி: 35331

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்

★

**RENUKA INDUSTRIES**

Importers, Exporters & Manufacturers of
Aluminiumwares

**170, 172, Old Moor Street**

**COLOMBO-12**

Telephone: 35679

கடமை

கண்ணியம்

கட்டுப்பாடு

என்ற கோட்பாடுகளுக்காக வாழ்ந்த

## திரு. S. செல்வவிநாயகம்

அவர்களுக்கு

# எமது அஞ்சலி

★

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

(கல்வியின் பயன் இறைவனை வணங்குதலாம்.)

*


**K. SUNDARAM & CO.**

**DAVEES ENTERPRISE**

No. 83, MIHINDU MAWATHA,

COLOMBO - 12.

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில்
உங்கள் சேமிப்பினை முதலீடு செய்து

ஒரு வருட வைப்புத் திட்டத்தில்

**22 %** வருட வட்டியையும்

இரு வருட வைப்புத் திட்டத்தில்

**27 %** வருட வட்டியையும் பெறலாம்.

மேலதிக விபரங்களுக்கு :

**மெர்க்கன்டைல்**
**கிறெடிட் லிமிட்டெட்**

51 - 53, ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு - 1. என்ற விலாசத்தை நாடுங்கள்.
தொலைபேசி: 26611 - 19.

கிளைகள் :

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் - 11/8, ஸ்ரான்லி வீதி, | தொலைபேசி: 321 |
| மாத்தறை - 27-1/1, தர்மபால மாவத்தை, | தொலைபேசி: 2466 |
| அனுராதபுரம் - 2, ஹரிச்சந்திரா மாவத்தை. | தொலைபேசி: 534 |
| கண்டி - 901/A, பேராதனை வீதி. | தொலைபேசி; 4196 |

அன்பும் பண்பும் நிறைந்த
சேவைசெய்து தங்களை
மகிழ்விப்பதே எமது நோக்கம்

**VENGATESHWARA**
**93, Keyzer Street**
**COLOMBO-11**

Telephone : **24588**

**வெங்கடேஸ்வரா**
**93, கெய்ஸர் வீதி**
**கொழும்பு-11**

உங்கள் மகிழ்ச்சியே

எங்கள் சேவையின் நோக்கம்

# நியூ கிருபா ஸ்ரோர்ஸ்

23, கபோஸ் லேன்,

கொழும்பு - 11.

தொலைபேசி : 27900.

எல்லோரும் இன்புற்றிருக்க

வேண்டுகிறோம்.

# R.M.P. PULAMADAN Chetty & Sons Ltd.

MEENAMBIKAI OIL MILLS

**KELANIYA**

*Telegrams ;* "AREMPIE"

*Telephone No.* 075 - 321, 075 - 322

1129


# திருவருள்

## மூலமாக

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

எனப் பிரார்த்திக்கின்றோம்,

★ ★ ★

## ஸ்ரீநிவாசன்ஸ் கோ., லிமிற்றெட்.

— ஏற்றுமதியாளர்கள் —

102, குமார வீதி — கொழும்பு - 11

தபாற்பெட்டி எண் - 673 தொலைபேசி: 24843

டெலெக்ஸ் : 21244 26575


திருவருள் கிடைக்குமிடங்கள் :

யாழ்ப்பாணம் — எண் 9/18, பெரியகடைத் தெரு, யாழ்ப்பாணம்.

சிங்கப்பூர் — திரு. K. அம்பலவாணர் அவர்கள்
1011, G Lange Road. Singapore 19 - 54.


Printed at Vipulananda Press, 248/5, K. K. S. Road, Jaffna & Published by Mr. R. Vaithamanithy of No. 5. Brassfounder's Street, Colombo - 13, for and behalf of Thiruvarul Association.

Chief Editor: Mr. V. Sathasivam M. A.